**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.172/2025**
**Sessions :**
**Deposition of Witness for : PW3, LW3**

| | |
|---|---|
| Name | திருமதி.மங்களபிரியா |
| Father's/Husband Name | திரு.குசலவன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 27th day of July, 2026**

(எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்)

<u>**முதல் விசாரணை**</u>:-

1. நான் தற்போது வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 19.03.2025ம் தேதியில் 14.00 மணியளவில் மதுவிலக்கு வேட்டைக்காக நான், தலைமை காவலர் குமரேசன் 913 மற்றும் தலைமை காவலர் ராஜன் 335 ஆகியோர் பார்ட்டி சகிதம் மதுவிலக்கு வேட்டையாக சூணாம்பேடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடங்களில் கண்காணித்து வந்தபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கோவைப்பாக்கம் கிராமத்தை சேர்ந்த ஜெயராஜ் என்பவர் அவரது வீட்டின் அருகே பனங்கள் விற்பதாக தெரியவந்தது. அங்கு சென்றபோது நாங்கள் வருவதை சற்று தூரத்திலேயே பார்த்துவிட்ட அவர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். அவர்

இருந்த இடத்தை சோதனை செய்தபோது சுமார் 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட 6 மண்பாணையில் சுமார் 30 லிட்டர் பனங்கள் இருந்தது. அவர் பனங்கள் இறக்கி விற்பனை செய்ய வைத்திருந்தது தெரிய வந்தது. மேற்படி பனங்கள்ளை எங்கள் முன்னிலையில் 14.15 மணிக்கு கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். **(அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்பு பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தால் போலிஸ் பார்ட்டி சகிதம் செய்து எங்கள் முன்னிலையில் பின்பு அன்றைய தினம் 14.30 மணிக்கு அழித்தல் மகசர் மூலம் சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தேன். **(அந்த அழித்தல் மகசர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி எதிரி ஜெயராஜ் என்பவருக்கு பிரிவு 35 BNSS ன்படி பாண்டு எழுதி வாங்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

3. காவல் நிலையம் வந்து 17.30 மணிக்கு எதிரி மீது நிலைய குற்ற எண்.119/2025, U/s.4(1)(C) r/w 4(1)(d) TNP Act ல் வழக்கு பதிவு_முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின் இறுதியாக விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 28.03.2025 ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

4. காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு கிலோமீட்டர் இருக்கும் என்றால் 35 கி.மீ இருக்கும். நான் காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் 9.00 மணிக்கு புறப்பட்டு சென்றேன். சூணாம்பேடு செல்லும்போது போகும் வழியில் வேறு ஏதாவது

கிராமம் சென்று பார்த்தேனா என்றால் எல்லா கிராமமும் சென்று பார்த்தேன். ரகசிய தகவல் எத்தனை மணிக்கு வந்தது என்றால் சுமார் 1.00 மணிக்கு போன் மூலமாக வந்தது. கோவைப்பாக்கத்தில் எத்தனை தெரு உள்ளது என்றால் எத்தனை தெரு என்று தெரியாது, எஸ்.ஓ.சியில் சொன்ன இடத்திற்கு சென்றோம். எதிரி வீட்டிலிருந்து கள் விற்பனை செய்த இடம் எவ்வளவு தூரம் என்றால் வீட்டின் அருகே தான் விற்பனை செய்தார். சம்பவ இடத்தில் பொதுமக்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள் ஆனால் சாட்சியாக யாரும் வரவில்லை. பணங்கள்ளை ஆய்விற்கு அனுப்பினேனா என்றால் இல்லை.

5. சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் இருந்து கொண்டு புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்குக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவ இடம் சென்றிருந்தால் வரைபடம் தயார் செய்து பொதுஜன சாட்சிகளை சாட்சியாக விசாரித்திருப்பேன் என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.